வடக்கு.மாகாண பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : **09/2023**

எனது இல:**NP/07/10/02/213**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
யாழ்ப்பாணம்.
*2023.03.08.*

செயலாளர், கல்வி அமைச்சு,
பிரதிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

**வடக்கு மாகாணப் பொதுச்சேவையின் கலாசார உத்தியோகத்தர் தரம் III (MN – 4) இல் உள்ள அலுவலர்களுக்கான 1வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2018 (II) 2023**

வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் *15.05.2015*ம் திகதி அனுமதிக்கப்பட்டதும் 2013.01.01ம் திகதியிலிருந்து செயல்வலுவில் உள்ளதுமான வடக்கு மாகாண பொதுச்சேவையின் கலாச்சார உத்தியோகத்தர் **(MN – 04)** சேவையிலுள்ளவர்களுக்கான சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகள் மற்றும் அவற்றில் காலத்திற்குக்காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றுக்கு அமைவாக, கலாச்சார உத்தியோகத்தர் **(MN – 04)** சேவையின் தரம் IIIஇலுள்ள அலுவலர்களுக்கான 1வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையானது செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களால் ***2023* ஆம் ஆண்டு** நடாத்தப்படும் என இத்தால், அறிவிக்கப்படுகின்றது.

*2.0* **தகைமைகள் :**

வடக்கு மாகாணப் பொதுச்சேவையின் கலாச்சார உத்தியோகத்தர் சேவையின் தரம் IIIஇன் **MN – 4** சம்பள வகுதியில் உள்ள அலுவலர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பதற்குத் தகைமை பெறுவர்.

*3.0* **விண்ணப்ப படிவம்**

*3.1* பரீட்சார்த்திகள், இச்சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினை தமது சொந்தக் கையெழுத்து மூலம் பூர்த்தி செய்து தமது திணைக்களத்தலைவர் ஊடாக **“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:** *393/48*, **கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.”** எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலிலோ / கைமூலமான தபால் முறையிலோ அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

*3.2* விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“ NP/07/10/02/213 ”** எனும் அடையாளக் குறியீட்டு இலக்கம் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படவேண்டிய இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்திசெய்திராத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டு அவை தொடர்பில் உரிய அலுவலர்களுக்கு அறிவிக்கப்படும்.

*3.3* விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படவேண்டிய இறுதித் திகதி ***2023.03.22*** ஆகும்.

***4.0*** **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்:-** பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்குப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
(ii) செல்லுபடியாகும் இலங்கைக் கடவுச்சீட்டு (Passport)
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம் (Driving License)

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரினதும் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

**5.0 பரீட்சைக் கட்டணம்:-**

5.1 முதன்முறையாக இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் அலுவலர்கள் பரீட்சைக்கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

5.2 ஏனைய பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு மட்டும் விண்ணப்பிப்பதாயின் ரூபா **250.00** ஐயும், ஒன்றிற்கு மேற்பட்ட பாடங்களுக்குத் விண்ணப்பிப்பதாயின் ரூபா **500.00**ஐயும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகமொன்றிலும் செலுத்தி காசுக்கட்டளையினை **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** என்ற பெயருக்கு **யாழ்ப்பாணத் தபால் அலுவலகத்தில்** மாற்றக் கூடியவாறு செலுத்துதல் வேண்டும்.

5.3 விண்ணப்பதாரி காசுக்கட்டளையின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் முடியாது.

**6.0 அனுமதி அட்டை :**

விண்ணப்பங்கள் முறைப்படியாக சமர்ப்பிக்கும் அலுவலர்களுக்கு, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். எவ்வாறாயினும், பரீட்சார்த்தியொருவருக்குப் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான சான்று அல்ல என்பதுடன், தகுந்த காரணங்களின் அடிப்படையில், பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளில் மாற்றம் ஏற்படலாம் என்பதையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். மேலும், பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தங்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்குக் குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அவர் அதுபற்றி பின்வரும் விபரங்களுடன் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு கிடைக்கக்கூடிய வகையில் அறிவித்தல் வேண்டும்.

- கோரிக்கைக் கடிதம்,
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி,
- பணம் செலுத்தியிருப்பின் காசுக்கட்டளையின் உறுதிப்படுத்திய பிரதி,
- விண்ணப்பம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், திகதி.
- அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய தொலைநகல் இலக்கம் (Fax No),

7.0 இப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர்களுக்கு, பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்களால் தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் XIIன் பிரிவு 19ற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

8.0 உத்தியோத்தர்கள் பரீட்சையில் சித்தியெய்துவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

9.0 பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள சகல பரீட்சார்த்திகளும் தமக்கான பெறுபேறுகளை வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk எனும் முகவரியில் Exam & Recruitments ⟶ Result எனும் தொடர்பின் ஊடாக பார்வையிடமுடியும் என்பதோடு, தனிப்பட்ட பெறுபேற்று அட்டவணையானது உரிய நியமன அதிகாரிகளால் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

10.0 பாடத்திட்டம் :-

இணைப்பு 01 இன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. (தமிழ், ஆங்கிலம்)

**11.0** மேலும், வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk எனும் முகவரியில் Exam & Recruitments ⟶ Advertisement எனும் தொடர்பின் ஊடாகவும் குறித்த சுற்றறிக்கையினைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்பதுடன், இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள்பற்றி தங்கள் அமைச்சின் / திணைக்களங்களின் / அலுவலகங்களின் கீழ்க் கடமையாற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்குத் தெரியப்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**கவனிக்கவும் :- இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும். மேலும், இவ்விடயத்தில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப்பிரிவின் 021 - 221 9939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

**சி.திருவாகரன்,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்

## பாடத்திட்டங்கள்

**இணைப்பு I**

**1வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை (தரம் III)**

| | | | |
|---|---|---|---|
| 1. தாபன விதிக்கோவை, நிதி ஒழுங்கு விதிகள், நடைமுறை விதிகள், திணைக்கள ஒழுங்கு விதிகள் மற்றும் சட்டங்கள் | பாட இல (01) | நேரம் – 03 மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள் |
| 2. இலங்கையின் கலாசார அபிவிருத்தி மற்றும் பாரம்பரிய கலாச்சாரங்கள் | பாட இல (02) | நேரம் – 02 மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள் |

**1. தாபன விதிக்கோவை, நிதி ஒழுங்கு விதிகள், நடைமுறை விதிகள், திணைக்கள ஒழுங்கு விதிகள் மற்றும் சட்டங்கள்**

தாபன விதிக்கோவை தொகுதி – I இன் அத்தியாயங்கள் :- VI, VII, VIII, XII, XIII, XIV, XVII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXIII, தாபன விதிக்கோவை தொகுதி – II இன் அத்தியாயங்கள் XLVII, XLVIII மற்றும் நடைமுறை விதிகள்

நிதி ஒழுங்கு விதிகளின் அத்தியாயங்கள் :- I, II, III, IV, V, அரசாங்க பெறுகை நடைமுறைகள் மற்றும் 13வது அரசியலமைப்பின் திருத்தங்கள்

1987ம் ஆண்டு 42ம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் பிரகாரம் அதிகாரக் கையளிப்பு

கலாசார, தொல்பொருள் அருங்காட்சியகம், தேசிய ஆவணக் காப்பகங்கள் தொடர்பான கலாசார நிதிகள் மற்றும் கலாசார விடயங்களை ஒழுங்கமைத்தல், கட்டமைப்பு தொடர்பான திணைக்களச் சுற்றறிக்கைகள், நிலையியற் கட்டளைகள்.

**2. இலங்கையின் கலாசார அபிவிருத்தி மற்றும் பாரம்பரிய கலாச்சாரங்கள்**

1. கலாசார அபிவிருத்தி தொடர்பான நோக்கங்களும் கொள்கைகளும்
2. பிராந்திய மட்டத்தில் பல்வேறு பாரம்பரிய கலாசார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணுதல், தயார்ப்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
3. தனியார் அழகியல் அமைப்புக்கள் மற்றும் சமூகங்களின் கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகள்
4. தேசிய அழகியல் சபை, நாடகக் கட்டுப்பாட்டுச் சபை, அருங்காட்சியகம் மற்றும் தொல்பொருள் அருங்காட்சியகம் ஆகியவற்றின் கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகள்
5. பாரம்பரிய கலாசாரம் மற்றும் அழகியல் போன்றவற்றை அடையாளங் காணதல், ஊக்குவித்தல் மற்றும் பிராந்திய மட்டத்தில் பாரம்பரிய கலாசாரம், அழகியல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தல் மற்றும் பிராந்திய பாரம்பரிய கலாசாரத்தைப் பாதுகாத்தல்

## Syllabus

**Annex I**

**1st Efficiency Bar Examination (Grade III)**

| | | | |
|---|---|---|---|
| 1. Establishment code Financial Regulations, Procedural Rules, Departmental regulation and Acts. | Sub. No *(01)* | Time – 03 Hours | *100* Marks |
| 2. Cultural Development and Traditional Heritage in Sri Lanka | Sub. No *(02)* | Time – 02 Hours | *100* Marks |

### 1. Establishment code Financial Regulations, Procedural Rules, Departmental regulation and Acts.

Establishment code Volume I – Chapters VI, VII, VIII, XII, XIII, XIV, XVII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXIII, Establishment code Volume II – Chapters XLVII, XLVIII and Procedural Rules.

Financial Regulations and Procurement Procedure of Government Chapters I, II, III, IV, V and procurement procedure and 13th amendment to the Constitution.

Delegation of powers according to the Provincial Councils Act.No 42 of 1987

Departmental circulars and standing order with regard to Cultural Affairs Organization structure of cultural fund Archaeological Department Museum and Department of National Archives.

### 2. Cultural Development and Traditional Heritage in Sri Lanka

1. Objective and principles of Cultural development.
2. Identification preparations and implementation of various traditional cultural development programmes at regional level.
3. Structure and functions of private aesthetic organizations and societies.
4. Structure and functions of national aesthetic board, Drama control board, museum & Archaeological museum.
5. Identify and encourage the traditional culture & aesthetic identification, encouragement, and implementation of traditional culture and aesthetics at regional level and preserve the Regional cultural heritage.